N. Asokan
Secretary & Senior Research Fellow

No.5. Kavignar Puduvai Sivam St
Venkata Nagar Extension
Pondicherry 605 011 INDIA
Ph: off: (413) 2213758, 2212443, 2211592
Mobile : 94432 21770
Res: (413) 2211710, 2212778
Fax:(413)2212338
e-mail:ashokmirra@gmail.com;motherssindia@gmail.com

*The Mother's Service Society*

09 / 01 / 2014

# பொன்னான நேரங்கள்

எல்லோர் வாழ்க்கையிலும் பொன்னான நேரம் அமைவதுண்டு. தன் கடந்த கால வாழ்க்கையை பின்னோக்கிப் பார்ப்பவருக்கு இது பொருந்தும். தான் பள்ளியில் படித்த நாட்கள் பொன்னான நேரம் என்று ஒருவர் சொல்லுவார். பல ஊர்களுக்கு மாற்றலாகி வாழ்ந்தவர் , ஒரு குறிப்பிட்ட ஊரை நினைவுபடுத்தி தான் அங்கு வாழ்ந்த நாட்கள்தான் தன் வாழ்வில் பொன்னான நேரம் என்று கூறுவார். பல்வேறு தடைகளையும், எதிர்ப்புகளையும் மீறி, தான் விரும்பியப் பெண்ணையே கரம் பிடித்ததுதான் பொன்னான நேரம் என்று ஒருவர் சொல்லுவார். தான் தொடங்கிய தொழில் பல வருடங்களாக மந்த நிலையில் இருந்து, ஒரு கட்டத்தில் சூடு பிடிக்க ஆரம்பித்தபோது அதையே அவர் பொன்னான நேரம் என்று ஒருவர் சொல்லுவார். இப்படி சாதாரண மனிதர்கள் வாழ்க்கையில் பொன்னான நேரம் என்பது அவரவர்கள் சூழ்நிலைக்கு ஏற்ப மாறுபடுகிறது. இப்போது அன்னை பக்தர்களுக்கு வருவோம். அன்னை இருந்தபோது அவரை பால்கனி தரிசனம் செய்தவர்கள் அதையே தன் வாழ்க்கையில் பொன்னான நேரம் என்று சொல்லுவார்கள். அன்னை சமாதியானபின் அவரிடம் வந்தவர்கள் அவரைப்பற்றிக் கேள்விப்பட்ட நேரம் , அவரைப்பற்றிய புத்தகத்தைப் படித்த நேரம், அவருக்காக உள்ள தியான மையத்திற்கு வந்த நேரம் என்றிவற்றை எல்லாம் பொன்னான நேரமாகக் கருதுவார்கள்.

வாழ்க்கையில் இன்பமான நேரத்தை மட்டும் பொன்னான நேரம் என்று நாம் சொல்வதற்கில்லை. நாம் வாழ்க்கையில் சரியான முடிவை எடுக்கும் நேரமும் அவரவர் வாழ்க்கையில் வரத்தான் செய்கிறது. இப்படி முக்கியமான நேரமாக உள்ள சந்தர்ப்பங்களை எல்லாம் நாம் பொன்னான நேரம் என்று சொல்லலாம். உதாரணமாக பகவான் அலிப்பூர் சிறையிலிருந்து வெளியில் வந்தார். வந்தவர் மேற்கொண்டு என்ன செய்வது என்று யோசித்து கொண்டிருந்தார். அப்போது அவர் உள்ளேயிருந்து அசரீரி ஒன்று எழுந்து, உலகை உய்விக்க புதுவைக்கு சென்று யோகம் செய் என்று கட்டளை இட்டது. அந்த அசரீயை பகவான் மதித்தார். அதன்படி அவர் புதுவைக்குச் சென்றார். அப்படி அவர் அந்த அசரீரியின் சொற்படி நடந்து கொண்டது அவருக்கு மட்டுமின்றி உலகிற்கே பொன்னான நேரமாக அமைந்தது. அம்மாதிரியே நேருஜி மற்றும் பட்டேல் இருவரும் வக்கீல் தொழில்தான் செய்து கொண்டு இருந்தார்கள். அவர்களை சந்தித்த காந்திஜி அவர்கள் வக்கீல் தொழிலை விட்டுவிட்டு தாய் நாட்டிற்கு சேவை செய்ய அழைத்தார். அதை அவர்கள் இருவரும் ஏற்றுக் கொண்டது இந்திய நாட்டிற்கே பொன்னான நேரமாக அமைந்தது. இன்று இந்தியாவில், M.S. சுவாமிநாதன் அவர்கள் உணவுத் துறையில் பிரபல விஞ்ஞானியாக உள்ளார். அவர் இளம் வயதில் I.P.S. தேர்வில் வெற்றிப் பெற்றார். அவர் அப்பாவோ அவர் போலீஸ் அதிகாரியாக வருவார் என்று நினைத்தார். ஆனால், சுவாமிநாதன் அவர்களோ போலீஸ் துறைக்குப் போகாமல் தமிழ்நாடு விவசாய பல்கலைக்கழகத்தில் விவசாயக் கலை படித்து, விவசாயத்தில்

ஆராய்ச்சியாளராக உருவெடுக்கப் போவதாக அறிவித்தார். அப்படி ஒரு முடிவை அவர் எடுக்காமல் வெறும் காவல் துறை அதிகாரியாகப் போயிருந்தார் என்றால், நாடு ஒரு தலைசிறந்த விஞ்ஞானியை இழந்திருக்கும். ஆனால் அப்படி ஒரு முடிவை எடுக்காமல் விவசாயத் துறைக்கு அவர் வந்தது நாட்டிற்கு ஒரு பொன்னான நேரமாகும்.

சில பேருக்கு அவர்களுடைய அற்புதமான குண விசேஷங்கள் வெளிவரும் நேரம் பொன்னான நேரமாக அமைகிறது. தனக்கு வயதாகிவிட்டதால் தன்னை பெண் பார்க்க வந்த வரனுக்கு தன் தங்கையை அலங்கரித்து அனுப்பிய பெண்ணிற்கிருந்த பரந்த மனப்பான்மை அவளுடைய குடும்பத்திற்கே பொன்னான நேரமாக அமைந்தது. ஏனென்றால் விஷயத்தை அறிந்த வரன் அப்படி பரந்த உள்ளம் கொண்ட மூத்தவளை தான் மணந்து, தன் தம்பிக்கு தங்கையை மணம் முடித்தான். பெண் பார்க்க வந்த வீட்டிலிருந்த சிறுவனுக்கு தன் செலவில் பூணூல் சடங்கையும் செய்தான். பொதுவாக தனக்கு தெரிந்தவருக்கு வாழ்க்கையில் நல்லது நடந்தாலே மனதில் பொறாமை எழுவதுண்டு. அடுத்தவர்களுக்கு குபேர சம்பத்து வந்தபோதும் தன் மனம் பொறாமையால் பாதிக்கப்படாதவரும் உண்டு. அப்படிப்பட்டவருக்கு அந்த நேரம் பொன்னான நேரமாக அமைவதுமுண்டு. பொதுவாக நாம் யாரைத் திட்டினாலும் திட்டினை பெறுபவருக்குக் கோபம்தான் வரும். அதிலும் திருமண வாய்ப்பைக் கொடுக்கும் பொழுது அந்த வாய்ப்பினைப் பெறப் போகின்ற பெண்ணே அவனை கண்டபடி திட்டுகிறாள் என்றால், தாங்க முடியாத அவமானமும், ஆத்திரமும்தான் வரும். அப்படி நடக்காமல் அந்த நேரத்திலும் அவள் திட்டியதில் ஒரு உண்மை இருக்கிறது என்று அந்த உண்மையை ஏற்று என் மனதை மாற்றிக் கொள்கிறேன் என்பவனின் உள்ளம் ஒரு பொன்னான உள்ளமாகும். தான் செய்ய வேண்டிய வேலையை தனக்காக செலவு செய்து ஒரு உறவினர் செய்யும்போது அந்த செலவை தான் ஏற்று உறவினருக்குப் பணத்தைத் திருப்பித் தருகின்ற மனிதர் பொன்னான மனிதராவார். தன்மீது அவதூறு கூறிய காரணத்தினால் தொழில் கெட்டு, நஷ்டத்திலாழ்ந்து, திவாலாகிப் போனவரைப்பற்றிக் கேள்விப்பட்டு சந்தோஷப்படாமல், அந்த சூழ்நிலையிலும் எதிரியை மீண்டும் நிமிர்த்த முயலும் உள்ளம் பொன்னான உள்ளம். அப்படிப்பட்டவர் சாதாரண மனிதரே இல்லை. அவரை ஒரு மாமனிதர் என்றுதான் சொல்ல வேண்டும்.

நம்முடைய ஆன்மாவின் நோக்கங்களை மதித்து அதற்கேற்றார்போல் நம் வாழ்க்கையை அமைத்துக் கொண்டால் அப்படிப்பட்ட வாழ்க்கை சீராக ஆற்றொழுக்காக அமைகிறது. திடீரென்று காரணமில்லாமல் குணம் கெட்டு அந்தப் பாதையை விட்டு நாம் விலகிச் செல்லும்போது வாழ்க்கை தடுமாறுகிறது. ஒரு கட்டத்தில் விழிப்புணர்வு வந்து, மீண்டும் சரியான பாதைக்கு திரும்பும்போது அப்படி திரும்புகின்ற நேரம் பொற்காலமாக அமைகின்றது. எவருமே ஒரு காரியத்தை செய்ய முன்வராதபோது தான் மட்டும் தைரியமாக அக்காரியத்தை செய்ய முன்வந்தால், அப்படி முன்வருகின்ற நேரம் பொன்னான நேரமாகும். ஹிட்லருடைய விமானப்படை இங்கிலாந்தைத் தாக்க முற்பட்டபோது, இங்கிலாந்து நாட்டு பொதுமக்களும், பெரும்பாலான அரசியல்வாதிகளும்கூட ஹிட்லருக்கு அடிபணிய தயாராகி விட்டனர். ஆனால், சர்ச்சில் ஒருவர்தான் ஹிட்லருக்கு சரணடையக் கூடாது. நாம் அவரை எதிர்த்துப் போராடி ஜெயிக்க வேண்டும் என்று வீர ஆவேசமாகப் பேசினார். அதை ஏற்றுக் கொண்டு அந்நாட்டு மக்களும், அரசியல்வாதிகளும் மனம் மாறி ஹிட்லரை எதிர்க்க முன்வந்தனர். அப்படி மனம் மாறிய நேரம் பொன்னான நேரம். அன்பான கணவரை இம்சை செய்துப் பார்க்கப் பிரியப்பட்ட மனைவி, அவரிடம் “ஒரு மணி நேரமாவது உன்னை ஜெயிலில் அடைத்து சந்தோஷப்படாமல் விடமாட்டேன் ” என்று சொன்னால், அப்படிப்பட்ட மனைவியிடம்கூட கணவன் பரிவுக்காட்டிய நேரம் பொன்னான நேரம்.

உலக வரலாற்றில் ஆயுதம் ஏந்திப் போராடாமல் சுதந்திரம் பெற்ற முதல் நாடு இந்தியாதான். இங்கே ஒரு விஷயத்தைக் கவனிக்க வேண்டும். இந்தியா பலஹீனமான நாடாக இருப்பதால், அடிமை நாடாகிவிட்டது என்றெல்லாம் நாம் நினைக்கக் கூடாது. பாரதமாதாவின் அடிமைத்தனத்தை, நாம்

கற்புக்கரசியின் கற்பிற்கு சமமாக நினைகின்றோம். கணவருடைய முரட்டுத்தனத்திற்கு பயந்து, பெண்கள் அடங்கிப் போவதுண்டு. கணவனுக்குக் கட்டுப்பட்டிருப்பதுதான் முறை என்று புரிந்துக் கொண்டு அதன்படி கட்டுப்படுவதுண்டு. அப்படிப்பட்டக் கற்புக்கரசியின் கற்பின் வலிமை அல்பமான கணவனையும் சிறந்த மனிதனாக மாற்றும். கோயில் குருக்களுடைய பக்தியும், வழிபாடும் எப்படி விக்ரஹத்தை தெய்வமாக மாற்றுகிறதோ, அம்மாதிரியே கற்புக்கரசியின் மனவலிமை சாதாரண ஆண்மகனையும் தெய்வ மகனாக மாற்றும். அந்த கற்புத்தன்மை உச்சக்கட்டத்தை அடையும்போது எமனிடமிருந்தே தன் கணவனின் உயிரை மீட்கக் கூடிய திறமையை அந்த கற்புக்கரசிக்கு அளிக்கிறது. இதை நாம் சாவித்ரிக் காவியத்தில் பார்க்கிறோம். இந்திய நாடு தானே ஒன்றுபட முன்வராதபோது அந்நியன் உள்ளே நுழைந்தால், அவன் நாட்டை ஒன்றுபடுத்துவான் என்று பாரத மாதாவிற்குப் புரிந்ததால், முகலாயர்கள் மற்றும் ஆங்கிலேயர்களின் வருகைக்கு பாரத மாதா சம்மதித்தாள். இவ்வாறு அந்நியர் ஆதிக்கம் செலுத்த உள்ளே நுழைந்த நேரம் நாட்டில் தாழ்த்தப்பட்ட பிரிவைச் சேர்ந்த நிறைய மக்கள் முஸ்லீமாக மாறினால், சமத்துவம் கிடைக்கும் என்று நம்பி அம்மதத்திற்கு மாறினார்கள். இப்படி இவர்கள் மாறினாலும்கூட இந்தியர்களாக இருப்பதில் அவர்கள் மனதில் வேறுபாடு வரவில்லை. நாட்டை ஆக்கிரமிப்புக்கு ஆளாக்கிய ஆங்கிலேயர்களுக்குதான் இந்துக்களையும், முஸ்லீம்களையும் பிரித்து வைப்பதில் ஆதாயம் தெரிந்தது. ஆங்கிலேயர்கள் மத வேற்றுமையை வளர்த்த போதிலும்1930-இல் நடந்த தேர்தலில்கூட முஸ்லீம்களுக்கு இந்துக்கள்மேல் துவேஷம் வரவில்லை.

அந்த தேர்தலில்கூட முஸ்லீம்கள் காங்கிரஸுற்குத்தான் ஓட்டுப் போட்டார்கள். இந்த நேரத்தில் ஆங்கில அரசாங்கம் இந்தியன் டொமினியன் ஆக்ட் என்ற ஒரு சட்டத்தை ஆங்கில பார்லிமெண்ட்டில் கொண்டு வந்தது. அப்படி ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தது நாட்டின் சரித்திரத்தில் ஒரு பொன்னான நேரம். அந்த பொன்னான நேரத்தின் அருமையை நாடு உணராமல் உதாசினப்படுத்தி விட்டது. அப்படி செய்தது நம்முடைய துரதிர்ஷ்டமாகும். வாய்ப்பை ஒரு முறை நழுவ விட்டால் அது மீண்டும் வருவது கடினம். ஆனால் ஆண்டவனின் அருள் இந்தியாவிற்கு ஏராளமாகக் கிடைத்துள்ளதால் அதே வாய்ப்பு மீண்டும் 1942-இல் இந்தியாவிற்கு கிரிப்ஸ் கமிஷன் மூலம் வந்தது. டொமினியன் ஆக்ட்டை முதலில் ஏற்றுக் கொண்டு பின்னர் நாளாவட்டத்தில் சுதந்திர நாடாக மாறிக் கொள்ளலாம் அப்படி செய்யும்போது நாட்டின் ஒற்றுமை கெட்டுப் போகாது. ஆகையால் கிரிப்ஸ் கமிஷன் அளிக்கும் சலுகைகளை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று பகவான் காங்கிரஸ் தலைமையிடம் விண்ணப்பம் விடுத்தார். அப்படி பகவான் விண்ணப்பம் விடுத்த நேரம் பொன்னான நேரம், வைரமான நேரமாக மாறிய நேரமாகும். பகவானுடைய விண்ணப்பத்தை மட்டும் காங்கிரஸ் தலைமை ஏற்றுக் கொண்டிருந்தால் இன்று இந்தியா, பாகிஸ்தான் என்று நாடு பிளவுபட்டிருக்காது. ஆனால் காங்கிரஸ் தலைமை அறிவில்லாமல் அதை நிராகரித்து விட்டது. காந்திஜி அவர்கள் அரவிந்தர்தான் அரசியல் வேண்டாம் என்று துறவறத்திற்குப் போய் விட்டார். இப்போது ஏன் அரசியலில் தலையிடுகிறார் என்று இடக்காக கேள்வி எழுப்பினார். இரண்டாம் உலகப் போருக்கு முன்னால் பகவான் உலகின் சூட்சும நிலைமை என்ன என்று ஒரு கணக்கு எடுத்தார். சூட்சும உலகில் நெகட்டிவாக செயல்படக் கூடிய கரிய சக்திகள் ஒன்று திரண்டு ஆர்ப்பாட்டம் செய்து கொண்டிருந்ததைக் கண்டார். இவற்றிக்கு எதிராக பாசிட்டிவ் சக்திகளும் ஒன்று திரள்வதையும் கண்டார். சூட்சும உலகில் இவற்றினிடையே மூண்ட போர் முடிவிற்கு வரவில்லை என்பதையும் அறிந்தார். ஜட உலகில் இதேமாதிரியான போர் நிகழ்ந்தால்தான், இந்த போராட்டம் முடிவுக்கு வரும் என்று அறிந்தார். அப்படி நிகழ்ந்த உலகப் போருக்கு அன்னையின் போர் என்று பெயரிட்டார். பாஸிட்டிவ் சக்திகள் போரில் வெற்றிப் பெறவும், அவர் வழி செய்தார். இந்த சமயத்தில்தான் இங்கிலாந்து பிரதமர் சர்ச்சில் அவர்கள் பிரான்சும், இங்கிலாந்தும் ஒன்று சேர்ந்து ஜெர்மன் தாக்குதலை சமாளிக்கலாம் என்று ஒரு கருத்து தெரிவித்தார். பேசாமல் ஹிட்லருக்கு சரணடைந்து விடுவோமா என்று பிரெஞ்சு தலைவர்கள் யோசித்து கொண்டிருந்த நேரம் இந்த கருத்தைத் தெரிவித்திருந்தார். பிரெஞ்சு தேசத்தின் வாழ்க்கையில் இது ஒரு பொன்னான

நேரம் என்று நாம் சொல்லலாம். ஆனால் அசம்பாவிதமாக பிரெஞ்சு தலைவர்கள் இந்த யோசனையை ஏற்க மறுத்துவிட்டார்கள்.

இதனால் இங்கிலாந்து தனிமைப்படுத்தப்பட்டிருந்தது. 250 விமானங்கள் கொண்ட ஆங்கிலேய விமானப்படை 750 விமானங்கள் கொண்ட ஜெர்மானிய படையை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இத்தகைய சூழ்நிலையில் எவரும் போருக்கு அழைத்தாலே பயந்துப் போவார்கள். ஆனால், சர்ச்சில் இளம் வீரர்களை அழைத்தபோது அவர்கள் சந்தோஷமாக தாய்நாட்டிற்காக தங்கள் உயிரை தியாகம் செய்ய முன்வந்தார்கள். உயிரை துச்சமாக மதித்து வீரர்கள் போரிடும்போது ஒரு அசாத்திய வீரம் வெளிப்படும். அதன் காரணமாகத்தானோ என்னவோ ஜெர்மானியப்படை, ஆங்கிலேயர் படைகளைவிட மூன்று மடங்கு பெரியதாக இருந்தபோதிலும், ஜெர்மானிய வீரர்களால் ஆங்கில விமானப்படை தாக்குதலை சமாளிக்கவே முடியவில்லை. வந்த வேகத்திலேயே பின்வாங்கினார்கள். இப்படி சரணடைந்தால்தான் உயிர் பிழைக்கலாம் என்ற நிலைமாறி, தாக்க வந்தவர்கள் விரட்டியடிக்கப்பட்ட நேரம் இங்கிலாந்து நாட்டு வரலாற்றிலேயே ஒரு பொன்னான நேரமாகும். ஒரு தேசத்திற்கே பொன்னான வீரம் அமைவதுபோல தனிப்பட்ட நபர்களின் வாழ்க்கையிலும் பொன்னான நேரம் அமையத்தான் செய்கிறது. அதுவும் தேசத்தின் வாழ்க்கையில் திருப்புமுனை வரும்போது தனிநபர் வாழ்க்கையிலும் திருப்புமுனைகள் அமையப் பெற்றால் இரண்டும் ஒன்று சேர்ந்து தேசத்திற்கும் சரி, தனிநபருக்கும் சரி பொன்னான நேரமாக அமைந்துவிடும். இப்படி ஒரு பொன்னான நேரத்தை தன் வாழ்க்கையில் அனுபவித்தவர்தான் கேரளத்தில் பிறந்து, இந்திய அரசாங்கத்தில் சிறப்பாகப் பணியாற்றிய V.P. Menon அவர்கள். கேரள மாநிலம் ஒரு சாதாரண மாநிலமே இல்லை. அத்வைதத்தை பரப்பிய ஆதிசங்கரர் அந்த மாநிலத்தில்தான் பிறந்தார். சேர நன்னாட்டிளம் பெண்களுடன் தோணி விளையாடியதாக பாரதியார் பாடியுள்ளார். கேரள மக்களுக்கு ஆங்கில அறிவு அதிகம். ஏழு, எட்டு வகுப்புகள் படித்த பிள்ளைகள்கூட ஆங்கிலம் நன்றாகப் பேசுவார்கள். மலைநாடு என்பதால் விவசாயம் குறைவு. அடுத்தபடியாக வேலை வாய்ப்பும் குறைவு. வெளிமாநிலங்களுக்குப் பிழைப்புத் தேடி செல்பவர்கள் அதிகம். இந்தியாவின் எந்த மூலைக்குச் சென்றாலும் அங்கே மலையாள நாயர் டீ கடை ஒன்றிருக்கும் என்று சொல்வார்கள். இப்படிப்பட்ட மாநிலத்தில்தான் V.P. Menon பிறந்து வளர்ந்தார். ஒன்பதாம் வகுப்புடன் படிப்பை முடித்துக் கொண்டு வெளியூருக்கு பிழைப்பிற்காக செல்ல வேண்டிய நிலை. சிறிது காலம் நிலக்கரி சுரங்கத்தில் வேலை செய்தார். பின்னர் அதுவும் பிடிக்காமல் டெல்லிக்குச் சென்றார். அங்கே சாலையில் எதிரில் வருபவரை தடுத்து நிறுத்தி, பதினைந்து ரூபாய் கொடுத்தால் பிழைத்துக் கொள்வேன். பெரிய மனது வைத்து நிதியுதவி செய்யுங்கள் என்று கேட்டார். அவருடைய அதிர்ஷ்டம் யாரை தடுத்து நிறுத்தி நிதியுதவி கேட்டாரோ அவரும் தயங்காமல் அந்த பதினைந்து ரூபாயைக் கொடுத்தார். அந்த ரூபாயில் அவர் சிம்லா சென்றார். ஒன்பது வகுப்புதான் படித்தவர் எனும்போது அவருக்கு எப்படி அரசாங்க வேலை கிடைத்தது என்று தெரியவில்லை.

சிம்லாவிற்கு சென்றவர் என்ன செய்தாரோ, ஏது செய்தாரோ ஒன்றும் தெரியவில்லை. எப்படியோ அரசாங்க சர்வீஸில் நுழைந்து விட்டார். அவருக்கு இருந்த ஆங்கில புலமையை நன்றாகப் பயன்படுத்தி அசுர வேகத்தில் அரசாங்க பணியில் முன்னேறி I. A. S. Officer -ருக்கு இணையாக உயர்ந்தார். ஒரு கட்டத்தில் வைஸ்ராய் பதவியில் இருந்த மௌண்ட்பேட்டன் அவர்களுக்கே காரியதரிசியாகவும், அவருக்குப் பின்னால் உள்துறை அமைச்சராகப் பணியாற்றிய சர்தார் வல்லபாய் பட்டேல் அவர்களுக்குக்கூட காரியதரிசியாகவும் செயல்பட்டார். 1947-ஆம் ஆண்டு அக்டோபர் மாத கால கட்டத்தில் பாகிஸ்தானை சேர்ந்த பட்டாணியர்கள், காஷ்மீர் மாநிலத்தில் ஊடுருவியபொது அம்மாநிலத்தில் அரசனாக இருந்த திரு. ஹரிசிங் அவர்கள் உடனடியாக இந்திய இராணுவ உதவியை நாடினார். இந்தியாவுடன் காஷ்மீர் இணையும்பட்சத்தில் அவ்வுதவியை கொடுப்போம். இணைவதா, வேண்டாமா எது நல்லது என்று நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள் என்று மௌண்ட்பேட்டன் அவர்கள் திரு. ஹரிசிங்கிற்கு செய்தி

அனுப்பினார். அந்த செய்தியை கொண்டு போனவரே திரு. V.P. மேனன் அவர்கள்தான். இரவோடு இரவாக காஷ்மீர் மகாராஜாவுடன் அமர்ந்து, நீங்கள் இந்தியாவுடன் இணைவதை தவிர வேறுவழியில்லை. தனித்து பாகிஸ்தானை உங்களால் சமாளிக்க முடியாது என்று மகாராஜாவின் மனதில் படும்படி பேசி இந்தியாவுடன் காஷ்மீர் இணைவதற்கான document-களை உடனடியாக தயாரித்து அதில் மகாராஜாவின் கையெழுத்துகளையும் உடனடியாக வாங்கி 48 மணிநேரத்தில் காஷ்மீரை இந்தியாவுடன் சேர்த்த பெருமையை அனுபவித்தவர் V.P. மேனன் ஆவார். இதுமட்டுமின்றி இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு முன்னரே இந்தியாவில் சொந்தமாக சமஸ்தானங்கள் வைத்துக் கொண்டு மன்னராட்சி நடத்தி வந்த கிட்டத்தட்ட 540 இந்திய மன்னர்களை எல்லாம் ஒருங்கே சந்தித்து, இந்தியாவுடன் இணைவதுதான் உங்களுக்கு நல்லது தனித்து செயல்படுவதோ அல்லது பாகிஸ்தானுடன் சேருவதோ நடக்காதக் காரியம் என்று அனைவருக்கும் புரியும்படி சொல்லி, சிக்கல் இல்லாமல் தகராறு இல்லாமல் காஷ்மீர் மகாராஜா மற்றும் ஹைதராபாத் நிஜாம் ஆகிய இருவரை தவிர மற்ற எல்லோரையும் இந்தியாவோடு இணையும் சாசனத்தில் கையெழுத்திட வைத்த பெருமை அவரைத்தான் சேரும்.

ஒரு வீடு அல்லது நிலம் விற்கும் பொழுது பேரம் படியாமல் நிறைய சிக்கல்கள் எழுவது நம் எல்லோருக்கும் நன்கு தெரிந்த அனுபவம். நல்ல மார்க்கெட் விலை உள்ள இடத்தில் அமைந்திருக்கும் மூன்று அல்லது நான்கு கிரவுண்ட் பிளாட் வருடக்கணக்காக விற்காமல், இருப்பதுண்டு. அது ஏன் அவ்வளவு தாமதமாகிறது என்று விசாரித்தால் சரியாக பேரம் படியவில்லை. இடத்தின் உரிமையாளர் விலை மிக அதிகமாகக் கூறுகிறார். எவராலும் அவரை இறங்கி வரச் சொல்ல முடியவில்லை. அவரிடம் சரியாக பேசுவதற்கு தகுந்த ஆள் கிடைக்கவில்லை என்று சொல்வதை நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். அம்மாதிரியே கூட்டுக் குடும்பங்களில் வருடக் கணக்காக சொத்துப் பிரிப்பதில் சகோதர, சகோதரிகளுக்குள் உடன்பாடு இல்லாமல் அந்த சொத்துக்கள் பாழாகிப் போவதுண்டு. இம்மாதிரி சூழ்நிலையில் விஷயத்தை எடுத்துப் பேசி, அடுத்தவர் கண்ணோட்டத்தில் உள்ள நியாயத்தை மனதில்படும்படி எடுத்துச் சொல்லி, சமரசமான ஒரு உடன்பாட்டை கொண்டு வரும் பேச்சாற்றல் ஏதோ ஒரு சிலருக்குதான் அமையும். ஒரு குடும்பத்திலுள்ள ஏழெட்டு பேர்களுக்கிடையே ஒரு சமரசமான உடன்பாட்டை கொண்டு வருவதற்கே ஒரு பெரிய ஆற்றல் தேவைப்படுகிறது என்றால் 540 ராஜபரம்பரையை சேர்ந்தவர்களிடையே எந்தவித எதிர்ப்போ, கருத்து வேறுபாடோ எழாமல் அழகாக, கச்சிதமாக அவ்வளவு பெரிய வேலையை ஒருவரால் முடிக்க முடிகிறது என்றால் அவரிடம் எவ்வளவு பெரிய பேச்சு திறமை இருந்திருக்க வேண்டும் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இப்படிப்பட்ட திறமை படைத்தவர் பிற்காலத்தில் கவர்னர் பதவி வகித்து ஓய்வு பெற்றார். தான் வாழ்க்கையில் செட்டிலாகிய பிறகு தனக்கு ரூ. 15 கொடுத்து உதவியவரை தேடிப்போய் அவரை கண்டுபிடித்து அப்பணத்தை திருப்பிக் கொடுக்க முயன்றபோது, அதை அவர் வாங்க மறுத்து உன்னைப்போல் சிரமப்படுபவர்களுக்கு நீ இந்த உதவியை செய் என்று அறிவுறுத்தினாராம். அந்த நல்ல அறிவுரையை அப்படியே ஏற்று கொண்டு அவ்வாறே மேனன் அவர்களும் சிரமப்படுபவர்களுக்கு ரூ. 15 நிதியுதவி செய்து வந்தாராம்.

இங்கே நான் சொல்ல வந்தது என்னவென்றால், பணம் இல்லாமல் தவித்து கொண்டிருந்தவருக்கு தகுந்த நேரத்தில் அந்தப் பண உதவி கிடைத்தது ஒரு பொன்னான நேரம். அந்த உதவியை செய்ய வந்தவருடைய மனமும் பொன்னானது. அதை திருப்பி கொடுக்க வேண்டுமென்று நினைத்த மேனன் மனமும் பொன்னானது. கொடுத்ததை ஏற்காமல் உன்னைப்போல் உதவி தேவைப்படுபவர்களுக்கு இதைச் செய் என்று சொன்னவர் மனமும் பொன்னானது. இன்று ரூ. 15 நமக்கு ஒரு பொருட்டே இல்லை. இந்த ரூ. 15-க்கு நாம் இரண்டு கப் டீ தான் வாங்கலாம். ஆனால் 1930-ஆம் ஆண்டு கால அளவில் ரூ. 15 என்பது ஒரு பவுன் விலைக்கு சமமாக இருந்தது. அதாவது அக்காலத்தில் ஒரு சவரனே ரூ. 15 தான். விலைமதிப்புடையதாக இருந்தது.

நாம் வாழ்க்கையில் பொன்னை பெரிதாக மதிக்கிறோம். ஆனால் மனிதனுக்கு பொன்னான மனநிலைகள் உண்டு என்பதை நாம் கருத வேண்டும். ஒரு கற்புக்கரசியின் கற்புநெறி பொன் போன்றது. உண்மையில் சொல்லப்போனால் விலை மதிக்க முடியாதது என்றுகூட நாம் சொல்லலாம். ஆரோக்கியமாக இருந்த கணவன் நோய்வாய்ப்பட்டு, படுத்தபடுக்கையாகி, உதவாக்கரையாகி விட்டான். அவருடைய இளமையான மனைவி அவருக்கு பணிவிடைகளை செய்தே காலத்தை ஓட்டுகிறார். குடும்பம் நடத்த வருமானம் போதவில்லை. அக்கம் பக்கம் வீடுகளில் வீட்டு வேலை செய்து சொற்ப வருமானத்தில் பிழைப்பை நடத்துகிறார்.  இதை கவனிக்கும் அதே தெருவிலுள்ள பணக்காரன் ஒருவன் உன் கணவருக்கு இவ்வாறு செய்து கொண்டு ஏன் இருக்கிறாய். அவன் உடம்பு தேறப் போவதில்லை. அவன் எழுந்து நடமாடப் போவதில்லை. உனக்கு அழகிருக்கிறது, இளமை இருக்கிறது. என்னுடன் வந்துவிடு. உன்னை ராணி மாதிரி வைத்துக் கொள்கிறேன் என்று ஆசை வார்த்தைகள் கூறும்போது, வீட்டு வேலை செய்தாவது என் மானத்தைக் காப்பாற்றிக் கொள்வேனே தவிர இப்படி உனக்கு விலை போகமாட்டேன் என்று தன்மானத்தோடு பேசும் நேரம் பொன்னான நேரமாகும். உயர்ந்த கற்பு நெறி என்பது நம் இந்திய நாட்டின் கலாச்சாரத்தில் உள்ள ஒரு ஆழமான பண்பாகும். இதை பின்பற்றி வாழும் அப்பெண்ணின் வாழ்க்கை ஒரு பொன்னான நேரமாகும்.

வாழ்க்கையில் சில பேருக்குத்தான் சிலது உரியது என்று சொல்லலாம். உதாரணமாக இறை அம்சம் கொண்ட ஆன்மீக மகான்களுக்கு மௌனம் என்பது இயல்பாகவே சித்திக்கும். அடுத்ததாக படைப்பாளிகளுக்கு புதிய சிந்தனைகள் தோன்றியபடி இருக்கும். இந்த ரீதியில் பார்த்தால், இயல்பாகவே காதலுக்கு டார்சி உரியவன் என்று நாம் சொல்லலாம். எல்லோருக்கும்தான் காதல் வருகிறது. ஆனால் அவையெல்லாம் நாம் தூய்மையான காதல் என்று சொல்ல முடியாது. நாம் யார் மீது பிரியம் வைக்கிறோமோ, அவர் நம் மீது பதிலுக்கு பிரியம் வைக்க வேண்டும் என்றுதான் நாம் எதிர்பார்ப்போம். அவருக்கு நாம் ஒரு நல்லது செய்தால், சம்பந்தப்பட்ட அந்த பெண்ணிற்கு அது தெரிய வேண்டும், அவளுக்கு சந்தோஷம் வந்து அவளுக்கு நம்மேல் காதல் வரவேண்டும் என்றுதான் நினைப்போம். இப்படி எழுகின்ற காதல் சாதாரணமாக பிரதிபலனை எதிர்பார்க்கும் காதலாகும். ஆனால், டார்சிக்கு எழுந்ததோ இவ்வித காதலில்லை. அவள் இவனை gentleman இல்லை என்றாள், அத்துடன் நிற்காமல் தான் திருமணம் செய்து கொள்ளும் கடைசி ஆள் இவனாகத்தான் இருக்கும் என்றும் கூறினாள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் அவள் தங்கையின் மானத்தைக் காப்பாற்றி, அவளுக்கு முறைப்படி திருமணமும் செய்து வைத்து, அது லிசிக்கு தெரிய வேண்டிய அவசியமும் இல்லை என்று கூறிவிடுகிறான். டார்சி செய்த உதவியால்தான் குடும்ப மானம் காப்பாற்றப்பட்டது என்று லிசிக்கு தெரிந்து, அதனால் அவள் மனம்மாறி , அவன்மேல் காதல் கொண்டால், அதில் அவனுக்கு ஒரு பிரயோஜனம் இருக்கிறது. அதுகூட அவளுக்கு தெரிய வேண்டிய அவசியமில்லை. நான் gentleman-ஆக நடந்து கொள்ளவில்லை என்பது உண்மை. தான் மறைத்த உண்மையால், விபரீதம் நடந்துள்ளபோது அதை சரி செய்வது தன் பொறுப்பு, அதுதான் gentleman-க்கு அடையாளம். எனவே நான் அதை செய்கிறேன் என்று அவன் முன் வந்தானே தவிர, சம்பந்தபட்ட லிசிக்கு அது தெரிவதே இரண்டாம்பட்சம் ஆனது. அதாவது அவள் சந்தோஷப்பட வேண்டும். தன்னால்தான் அந்த சந்தோஷம் வந்தது என்று அவளுக்கு தெரியத் தேவையில்லை என்ற மன நிலைக்கு அவன் வந்து விட்டான். இதைத்தான் உண்மையான self-giving என்கிறோம். மேலும் திட்டு வாங்கும்போது அவனுக்குக் கோபமே வரவில்லை. மாறாக அவள் கூறியதில் உண்மை இருக்குமோ என்று தோன்றியது. அந்த உண்மையை ஏற்று உண்மையிலேயே மனம்மாறி, அவள் குடும்பத்திற்கு வந்த இக்கட்டிலிருந்து அவளைக் காப்பாற்றி, அந்த வகையில் அவளை மகிழ்விக்க வேண்டும் என்று அவனுக்குத் தோன்றிய நேரம் அவன் வாழ்வில் ஒரு பொன்னான நேரம்.

மேல்நாட்டு இலக்கியங்களில் காதல் பிரசித்தமான ஒன்று. ஷேக்ஸ்பியரின் tragedies எடுத்துக் கொண்டால் ஒத்தல்லோவும், ரோமியோ மற்றும் ஜூலியட் இரண்டுமே காதலை மையமாக வைத்த

நாடகங்கள்தான். Desdamona-விற்கு, ஒத்தல்லோ மீதிருந்த காதல் அவ்வளவு புனிதமானது. இருந்தாலும், இந்த காதலின் புனிதத்தை அவன் உணரவே இல்லை. அவள் கழுத்தை நெரித்துக் கொலைதான் செய்தான். ரோமியோ மற்றும் ஜூலியட் இடையில் அரும்பிய காதல் மிகவும் தீவிரமான காதல். ஆனால் விரோதமனப்பான்மை கொண்ட இரு குடும்பத்தாரிடையே இளைய தலைமுறையினருக்கு அரும்பிய காதல் வளர்ந்து, தழைக்கவே வழியில்லை. ஆகவே அப்படி அரும்பிய காதல் மடிந்து போகிறது. இந்திய இலக்கியங்களில் பார்த்தால், காதலைவிட கற்பிற்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. இதையெல்லாம் வைத்து பார்க்கும்போது யாருடைய மனதிலாவது தெய்வீகமான காதல் பிறந்தால், அதை ஏற்றுக் கொள்ளக்கூட இன்னொருவர் கிடைக்க மாட்டார் என்று தெரிகிறது. டார்சிக்கு வந்த காதல் அப்படிப்பட்ட ஒரு தெய்வீகக் காதலாகும். அதில் ஒட்டிக்கொண்டு இருந்த சிறிதளவு சுயநலத்தைகூட அவன் தியாகம் செய்து விடுகிறான். ஆனால், அந்த காதலுக்குரியவளோ பெம்பர்லி மாளிகையைக் கண்டு பரவசப்பட்டுப் போகிறாள். அவளுடைய மனநிலை அவ்வளவு சாதாரணமாக இருந்தது. அவள் சாதாரணமாக இருக்கிறாளோ இல்லையோ, அவளை மகிழ்விப்பதில் அவன் நாட்டம் கொண்டான். இப்படி அவனுக்கு தோன்றிய நேரம் அவன் அக வாழ்வில் அவனுக்கு ஒரு பொன்னான நேரம்.

தெய்வீகக் காதலை வேறெங்காவது பார்க்க வேண்டும் என்றால் பகவானின் சாவித்திரி காவியத்தில் நாம் அதைப் பார்க்கலாம். எமனிடமிருந்தே இறந்துப்போன தன் கணவனின் உயிரையே சாவித்ரி மீட்கிறாள். பூமா தேவியின் ஆன்மாவாக சத்தியவானை சித்தரித்து, சூரிய புத்திரியான சாவித்ரி அவனை மணப்பது, சத்திய ஜீவியம் பூவுலகிற்கு வர வழி செய்கிறது என்பது சாவித்ரி காவியத்தின் நோக்கம். ஒருவகையில் பார்த்தால், சாவித்ரியில் வெளிப்படும் காதலை divine romance என்றுகூட சொல்லலாம். வாழ்க்கையில் சில சமயங்களில் அதிர்ஷ்டம் என்பது வலுக்கட்டாயமாக நம்மேல் திணிக்கப்படுவதுண்டு. உதாரணமாக சுதந்திரத்திற்கு முன்னால் தமிழ் நாட்டில் இருபெரும் காங்கிரஸ் தலைவர்களுக்கிடையே போட்டி எழுந்தபோது இடையில், எந்த பிரசித்தமும் இல்லாத சாதாரண தொண்டனாக இருந்த காமராஜர் அவர்கள் TNCC பிரசிடெண்ட்டாக தேர்ந்தெடுக்கப்பட்டார். இது அவர் எதிர்பார்க்காத ஒன்று. அம்மாதிரியே விருது நகரில் வீட்டிலிருந்து துரத்தப்பட்டு பாக்கெட்டில் எட்டணாவுடன் மட்டுமே சென்னைக்கு வந்த ஒருவர், வியாபாரத்தில் ஈடுபட்டு சென்னையில் ஒரு பெரும் வர்த்தகப் புள்ளியானார். இப்படி வீட்டை விட்டு துரத்தப்படும் பொழுது, இப்படித்தான் அதிர்ஷ்டம் அவரை துரத்துகிறது என்று அவருக்கு தெரியுமோ? கட்சியிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட அரசியல்வாதி ஒருவர் உடனடியாக தனிக்கட்சி ஆரம்பித்து, அடுத்த தேர்தலில் அவரே முதன் மந்திரியானார். கட்சியிலிருந்து நீக்கப்படுவது என்பது அவமானம். அந்த அவமானத்திற்குப்பின் பெரும்புகழ் மறைந்துள்ளது என்பது அவருக்குத் தெரியுமோ? இப்படி அதிர்ஷ்டம் நம்மை வலுக்கட்டாயமாகத் தேடிவருகின்ற இடங்களில் எல்லாம் சம்மந்தப்பட்டவர் வாழ்க்கையில் அவை பொன்னான நேரமாகும்.

வாழ்க்கையில் அதிர்ஷ்டம் ஒருவரை நாடி வர முடிவு செய்துவிட்டால், அதை அவர் அறியாதிருக்கும்போது, வலுக்கட்டாயமாக அதிர்ஷ்டம் இப்படித்தான் அவர் வாழ்க்கையில் புகுந்து வரும். தகப்பனார் இறந்து போனால், லாங்பர்ன் எஸ்டேட் காலின்ஸ் கைக்கு போய் குடும்பமே நிர்கதியாக நிற்க வேண்டிய பரிதாபத்திற்குரிய ஒரு நிலைமை வரும். அப்படிப்பட்ட ஒரு அவலநிலை அக்குடும்பத்திற்கு வரக் கூடாது என்று காலின்ஸ் முடிவு செய்து, பென்னட் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணை மணக்க முடிவு செய்கிறான். நியாயமாகப் பார்த்தால், இதுவொரு பெருந்தன்மையான செயல்பாடாகும். இருந்தாலும் இப்படிப்பட்ட ஒரு கஷ்டமான சூழ்நிலையில் ஒரு அதிர்ஷ்டமயமான ஒரு வாய்ப்பு தம்மை தேடி வரும்போது, யாரும் அதை சந்தோஷமாக ஏற்றுக் கொள்வார்கள். ஆனால், காலின்ஸ் எலிசபெத்தின் எதிர்பார்ப்பின்படி மரியாதைக்குரியவனாகத் தென்படவில்லை என்பதால், அவள் அவ்வளவு பெரிய அதிர்ஷ்டத்தையும் வேண்டாம் என்கிறாள். வாழ வழியின்றி தவித்துக் கொண்டிருக்கும் எத்தனை பேர் இப்படி ஒரு வாய்ப்பு வந்தால், நழுவ விடுவார்கள்? ஆனால், லிசி இந்த காரியத்தை செய்திருக்கின்றாள்

என்று நாம் பார்க்கிறோம். ஒரு மரியாதைக்கில்லாத ஆண்மகன் மூலம் அதிர்ஷ்டம் வரும்போது அந்த அதிர்ஷ்டத்தையும் மறுக்க பெரிய தைரியமும், அஞ்சா நெஞ்சமும் வேண்டும். அப்படிப்பட்ட அஞ்சா நெஞ்சமும், தைரியமும் லிசியிடம் தென்பட்டது. அந்த தைரியத்திற்கு வாழ்க்கை கண்டிப்பாகப் பெரிய பரிசு அளிக்கும். அந்த தைரியத்திற்குக் கிடைத்த பரிசுதான் பிம்பர்லி அவளை தேடி வந்தது.

காலின்சைவிட, டார்சி ஆண்மகன் என்று பார்த்தால் எவ்வளவோ தேவலை. ஆனால், அவனுடைய பணபலத்திற்குக்கூட லிசி மயங்கவில்லை. தன் சகோதரியின் திருமணத்தைக் கெடுத்து விட்டான் என்ற ஒரே காரணத்தினால், கோடீஸ்வர மணமகனின் திருமண வாய்ப்பையும் ஏற்க மறுத்தாள். மெரிட்டனில் உள்ள எந்த பெண்ணிற்கும், கனவிலும் எட்ட முடியாத உயரத்திலிருப்பவன் டார்சி. அவனை திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று ஆசை வருவதற்குக்கூட கரோலின் ஒருத்திக்குத்தான் அந்த தகுதியும் உண்டு. லிசி டார்சியை ஆசைப்படும் இடத்திலேயே இல்லை. ஆனால் இவள்தான் திட்டவட்டமாக டார்சியை மணக்க மறுத்துவிடுகிறாள். அவள் ஏன் அப்படி செய்தாள், எதை எதிர்பார்த்து செய்தாள் என்று கேட்டால், அதற்கெல்லாம் சரியான பதிலே இல்லை. நம் மனம் நியாயத்தை அளவு கடந்து பாராட்டினால், வாழ்க்கை வெகுசிறப்பாக அதற்கு பதிலளிக்கும் என்று மட்டும் புரிந்து கொள்ளலாம்.

நம் மனம் பொன்னாக இருந்தால் நாம் எதிர்பார்க்காத விஷயங்கள்கூட நம்மை தானாக வந்தடையும். அப்படித்தான் டார்சி எலிசபெத்தை வந்தடைகிறான். எதிர்பாராதவருக்கு வாழ்க்கை எப்படியெல்லாம் பரிசளிக்கிறது என்பதற்கு “கோமதியின் காதலன் ” என்று தேவன் அவர்கள் எழுதிய நாவலே சிறந்த உதாரணம். இக்கதையில் கதாநாயகன் பெயர் ரங்கராஜன். அவன் ஒரு ஜமீன்தார் குடும்பத்து பிள்ளையாவான். அண்ணனிடம் கோபித்துக்கொண்டு சென்னைக்கு ரயில் ஏறி வருகிறான். பஸ் நிறுத்தத்தில் ஒரு ரவுடியிடமிருந்து ஒரு இளம் பெண்ணை காப்பாற்றுகிறான். கண்டதும் காதல் என்பார்களே அதுபோல் அவனுக்கு அவளையும், அவளுக்கு அவனையும் பிடித்துப் போகிறது. பஸ் வந்த பிறகு அவள் புறப்பட்டு சென்று விடுகிறாள். அதன் பிறகு அவள் யார்? அவள் எங்கு சென்றாள்? அவளை மீண்டும் பார்க்க முடியுமா? என்று கேட்டால் சந்தர்ப்பமே இல்லை என்றுதான் பதில் சொல்ல முடியும். ஆனால், இருவர் மனதிலும் எழும்பியது உண்மையான காதல். அதற்கு உயிருண்டு, ஜீவனுண்டு. ஆகவே அது செயல்பட ஆரம்பிக்கிறது. ரங்கராஜன் எங்கு போவது என்றுகூட தெரியாமல் கால்போன போக்கில் நடந்து போகிறான். எதிரே வருபவருடைய கார் break down-ஆகி நிற்கிறது. இவனுக்குக் கார் ரிப்பேர் வேலை ஓரளவிற்கு தெரியும். உதவ முன்வருகிறான். காரும் சரியாகி விடுகிறது. இவனே அதை ஓட்டிக் கொண்டுபோய் கார் உரிமையாளரின் வீட்டில் விடுகிறான். பஸ் நிறுத்தத்தில் எந்தப் பெண்ணை பார்த்தானோ அந்தப் பெண் அந்த வீட்டில் இருக்கிறாள். அவளைப் பார்த்தவுடன் அங்கேயே இருந்துவிட வேண்டும் என்று அவனுக்குத் தோன்றுகிறது. அதற்கேற்றார்போல் அந்த கார் உரிமையாளரும், அவனைபற்றி விசாரிக்க, அவருக்கு ஒரு டிரைவர் தேவைப்படுகிறது என்று இவனுக்குத் தெரிந்து அங்கேயே டிரைவர் பணியில் அமர்ந்தும் விடுகிறான். இவன் பார்த்த பெண்ணோ ஜமீந்தார் வீட்டுப் பெண். இவனோ தான் ஒரு ஜமீந்தார் வீட்டுப்பிள்ளை என்பதை மறைத்து, ஒரு சாதாரணமானவன்போல் நடந்துக் கொள்கிறான். ஒரு சாதாரண டிரைவர்போல் அவன் நடந்துகொண்டாலும், அவன் மேலுள்ள பிரியத்தை அவள் விடவில்லை. அடுத்தடுத்து பல நிகழ்ச்சிகள் நடந்து, நான்காம்நாள் இவன் ஒரு ஜமீன்தார் வீட்டுப்பிள்ளை என்ற விஷயம் வெளியே வருகிறது. அவனை அழைத்துக் கொண்டு போக வந்திருக்கும் அவனுடைய தந்தையார், கோமதியை அவன் விரும்புகிறான் என்று புரிந்து கொண்டு அவளை முறையாக பெண் கேட்டு திருமணத்தையும் உறுதிபடுத்திக் கொள்கிறார். இதில் நாம் கவனிக்க வேண்டியது ஒரு பெண்ணை பார்த்த நான்காம் நாளே அவளை தன் மனைவியாக ஏற்று கொள்ளும் அளவிற்கு வாழ்க்கை அவனுக்கு அதிர்ஷ்டத்தை பரிசாக அளிக்கிறது. டார்சியும், இப்படித்தான் எலிசபெத்தைப் பார்த்துவிட்டு, அவளை மணமுடிக்க வேண்டும் என்று விரும்புகிறான். ஆனால், அவனுக்கு இருந்த அகம்பாவம், சுயநலம் எல்லாம் விலகி அதிர்ஷ்டத்தை அனுபவிக்கும் பக்குவம் வருவதற்கு அவனுக்குப் பத்து மாதங்களாகிறது.

ரங்கராஜனோ தான் ஜமீன்தார்வீட்டுப்பிள்ளை என்பதையே காட்டிக் கொள்ளாமல் சாதாரண ஏழை driver-ராக தன்னைக் காட்டிக் கொண்டாலும், உள்ளத்தால், அவன் சிறப்பானவன் என்பதால் வாழ்க்கை அவன் சுயரூபத்தை நான்கே நாட்களில் வெளிப்படுத்தி அவன் திருமண ஆசையை பூர்த்தி செய்து வைக்கிறது.

தாம் வாழ்க்கைக்கு உகந்த மனநிலையை எட்டிவிட்டோம் என்றால், கொடுக்கின்ற தெய்வம் கூரையை பிய்த்துக் கொண்டு கொடுக்கும் என்பதைப்போல வாழ்க்கை இருக்கிறன்ற சந்தர்ப்ப சூழ்நிலைகளை நமக்கு சாதகமாக மாற்றி நாம் தேடுவதை கைமேல் பரிசாகக் கொடுப்பதைப் பார்க்கலாம். P & P-இல் எலிசபெத், டார்சி உறவை பாருங்கள். திருமணம் செய்து கொள்வதாக இருந்தால், நீதான் கடைசி ஆள் என்று அவள் சொல்லிவிட்ட பிறகு ஏறக்குறைய அந்த உறவு முறிந்து விட்டது என்றே சொல்லலாம். ஆனால் அவளிடம் திட்டு வாங்கிய பிறகுதான் அவனே திருந்துகிறான். அவன் திருந்திய பிறகு வாழ்க்கை அவனுக்குப் பரிசளிக்க விரும்புகிறது. அது என்ன செய்கிறது? வேறு எங்கோ உல்லாசப் பயணம் போக திட்டமிட்டிருந்த எலிசபெத்தின் மாமாவின் மனதை மாற்றி, டார்சி இருக்கும் Derbyshier-க்கு அவர்களை வரவழைத்தது. இரண்டாவதாக அவன் ஊரில் இல்லை என்று தெரிந்து கொண்ட பின்புதான் அவளே அங்கு வந்தாள். ஆனால், வாழ்க்கையோ திடீரென்று அவன் மனதை மாற்றி ஒருநாள் முன்னதாகவே அவனை ஊருக்கு வரும்படி செய்து எதிர்பாராத வகையில் இருவரையும் சந்திக்க வைத்தது. லிடியா ஓடிப்போய் விட்டாள் என்ற செய்தியை சாதாரணமாக அவனிடம் சொல்லக்கூடிய பெண்ணே இல்லை அவள். இருந்தாலும் அவளையும்மீறி அவனிடம் சொல்ல வைத்தது. அது தெரிந்தால் அவன் விலகித்தான் போவான் என்று அவள் எதிர்பார்த்தாள். ஆனால் அவன் விலகிப் போகவில்லை. தன்னை திருத்திக்கொள்ள இது ஒரு நல்ல சந்தர்ப்பம் என்றுதான் எடுத்துக் கொண்டான். லிடியாவிற்கு திருமணம் செய்து வைத்தபின்கூட அவளின் அன்பை மீண்டும்பெற தனக்கு தகுதி வந்துவிட்டதாக அவன் நினைக்கவில்லை. அவன் மீண்டும் proposal கொடுத்தால் தான் ஏன் மறுக்க வேண்டும் என்று கேத்ரீன் டீ பர்க்கிடம் பேசியது தெரிந்தபின்தான் மீண்டும் proposal கொடுத்தால் மறுக்க மாட்டாள் என்ற துணிவு வந்து proposal–ஐயும் வழங்கி, தன் எண்ணத்தைப் பூர்த்தி செய்து கொண்டான். இந்தளவிற்கு வாழ்க்கை அவனுக்கு சாதகமாக நிகழ்ச்சிகளை மாற்றியமைத்து இருக்கிறது என்றால், அவனுடைய பொன்னான மனத்திற்கு அப்படியொரு பரிசை தந்திருக்கிறது என்றர்த்தமாகிறது.

இப்படி தான் மீண்டும் prpostal கொடுத்தால், அவள் அதை ஏற்றுக்கொள்வாள் என்று அவன் உணர்கின்ற நேரம் அவன் வாழ்க்கையில் ஒரு பொன்னான நேரம். நமக்கு கையில் கிடைக்கும் ஆண்டவனின் பிரசாதம் பார்ப்பதற்கு எளிதாகத்தான் தெரியும். ஆனால் அதைப் பெறுவதற்குகந்த மனநிலையில் இருப்பதோ மிகவும் கடினமாகும். உதாரணமாக ராமாயணத்தில் வரும் தேரை மனதில் எந்நேரமும் ராமனைத்தான் நினைத்துக் கொண்டிருக்கிறது. ஆனால் தேரைக்குக் கிடைத்தது என்ன? ராமனுடைய பாணம்தான் அதன் முதுகில் குத்தியது. பகவானைத் தேடி அன்னை வந்தபோது இடம் தெரியாமல் ஒரு வழிப்போக்கரை பகவானுடைய வீடு எது என்று கேட்கிறார். அவரும் இதுதான் என்று பகவானுடைய வீட்டை சுட்டிக் காட்டினார். அது என்னவோ ஒரு எளிய செயல்தான். ஆனால் பகவானை அன்னை தரிசித்த நேரம் அவர் வாழ்க்கையில் ஒரு பொன்னான நேரம். பகவானை தரிசித்தபின் அன்னைக்கு கிடைத்தது என்ன? அன்னை கேட்காமலேயே பகவான் அவருக்கு ஒரு ஆழ்ந்த மௌனத்தைக் கொடுத்தார். அவர் வாழ்நாள் இறுதிவரை அந்த மௌனம் அவரை விட்டு விலகவில்லை. அப்படி ஒரு சிறந்த தெய்வீகமான மௌனத்தை ஒரு நிமிடத்தில் ஒருவரால் அடுத்தவருக்குக் கொடுக்க முடியும் என்றால், அவர் உண்மையிலேயே அவதாரப் புருஷர்தான் என்று அன்னை உணர்ந்தார். பகவானை சந்தித்துவிட்டு மீண்டும் தன் இருப்பிடம் சென்றவர் அன்று தன் டைரியில் உலகத்தில் யார் இருளில் மூழ்கியிருந்தாலும் பரவாயில்லை நேற்று நான் பார்த்தவர் உலகில் இருக்கும்வரை ஆண்டவன் திருவுள்ளம் உலகில் நிறைவேறுவது நிச்சயமாகும் என்று குறிப்பிட்டார். இப்படி ஒரு மௌனம் பெற்றுக்கொள்ள கூடி ய சந்தர்ப்பம் கிடைத்தது அன்னையின் வாழ்வில் ஒரு பொன்னான நேரமாகும்.

பகவான் பெற்ற ஆன்மீக சித்திகள் எல்லாம் அவருடனேயே தங்கி விட்டிருக்கும். அன்னை அவரிடம் வந்தபின்புதான் அந்த சித்திகள் எல்லாம் அவருடனேயே நின்று விடாமல் அன்னையின் மூலம் உலகெங்கும் பரவின. ஆகவே அன்னை வந்தது பகவானுடைய வாழ்க்கையில் ஒரு பொன்னான நேரம் என்று கூறலாம். பகவானுடைய பூரண யோகத்தில் சூட்சும பயிற்சிகளுக்கு முக்கிய இடம் உண்டு. அந்த சூட்சும பயிற்சிகளை எல்லாம் பகவானிடம் வருமுன்பே அன்னை தியோன் என்பவரிடம் கற்றுக் கொண்டார். முதலில் அவரைத்தான் தான் கனவில் கண்ட கிருஷ்ணனாகக் கருதினார். பின்பு அவர்தான் God of death, மரணத்தின் தலைவன் என்று அறிந்து, அவரை விட்டு விலக ஆரம்பித்தார். சூட்சும உலகில் சஞ்சாரம் செய்யும்போது, ‘வாழ்வின் மந்திரம் ’ என்று சமஸ்கிருதத்தில் எழுதப்பட்ட ஒரு மந்திரத்தைக் கண்டறிந்தார். ஆனால் அதை தியோனிடம் தர மறுத்து, பதிலாக பகவானைக் கண்டபோது அவரிடமே கொடுத்தார். பகவான் யோகம் செய்வதற்காக புதுவை வந்தார் என்றாலும், ஆசிரமம் ஆரம்பிக்க வேண்டும் என்ற எண்ணம் அவர் மனதிலிலில்லை. அந்த எண்ணம் தோன்றி செயல்படுத்தியவர் அன்னைதான். அம்மாதிரியே ஆரோவில்லை நிறுவ வேண்டும் என்று அன்னைதான் முடிவு செய்தார். இப்படி தன்னிறைவாக வாழ்ந்து கொண்டிருந்த பகவானை, உலகத்திற்கு தெரியப்படுத்தி, அவரை உலகத்தின் சொத்தாக மாற்றியவர் அன்னைதான். அவர் பகவானை முதலில் சந்தித்தது 1914-ஆம் ஆண்டு மார்ச் 29-ஆம் தேதியாகும். நிரந்தரமாக அவருடனேயே வந்து தங்கியது, ஏப்ரல் 24-ஆம் தேதியாகும். இந்த இரு நாட்களும் பகவானுடைய வாழ்க்கையில் பொன்னான நாட்களாகும் என்று நாம் சொல்லலாம்

%%%%%%%%%%